சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட கொளத்தூர் ,திரு.வி.க. நகர் ஆகிய சட்டமன்ற தொகுதிகளின் பாகமுகவர்கள் (BLA2) ஆலோசனை கூட்டம் 25.06.2025 புதன்கிழமை காலை 11.00 மணியளவில் சென்னை, கொளத்தூர் ,ஜி.கே.எம். காலனியிலுள்ள அரிச்சந்திரா மைதானத்தில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னை கிழக்கு மாவட்ட கழகத்தின் செயலாளர் பி.கே. சேகர் பாபு தலைமையில் பகுதிக் கழகச் செயலாளர்கள் ஐசிஎப்.வ.முரளிதரன்,எ.நாகராசன்,எம். சி,செ.தமிழ்வேந்தன்,எம்.சாமிக்கண்ணு ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றக்கூட்டத்தில் கழக துணை பொதுச் செயலாளரும், மண்டல தேர்தல் பொறுப்பாளருமான ஆ.ராசா, எம்.பி அவர்கள் கலந்து கொண்டு வாக்குச்சாவடி பாக நிலை முகவர்களுக்கு(BLA 2) ஆலோசனை வழங்கினார். இந்த ஆலோசனை கூட்டத்தில் சென்னை மாநகராட்சி மேயர் பிரியாராஜன், டாக்டர் . கலாநிதி வீராசாமி எம்.பி,ப.தாயகம் கவி.எம்.எல்.ஏ,இரா.விடுதல,என்.கிருஷ்ணமூர்த்தி, கே.சந்துரு,சி. மகேஷ்குமார்,சரிதா மகேஷ்குமார்,எம்.சி,எஸ்.பன்னீர் செல்வம், எம்.சி,பி.ஜே.துளசிங்கம்,பி.உதயசங்கர், எம் பெரோஸ்கான், இரா. வீரமணி, கா. ராஜ் முஹம்மது, நா. துலுக்கானம், எஸ். தனசேகர்,துரை கண்ணன் ஆர். எஸ் .சித்திக் ம. அசோக் குமார் மற்றும் வட்டக் கழகச் செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள்,பி எல் ஏ 2 க்கள் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் செயல்வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட சிறுபான்மை நல உரிமை பிரிவு துணைத் தலைவர் என்.ஷாஜகான், மகள் திருமணம் படப்பை ஹர்ஷா கார்டனில் நடைபெற்றது. இந்த விழாவில் மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் தா.மோ. அன்பரசன், தாம்பரம் மாநகர கழக செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் மாவட்ட கழக துணை செயலாளர் இ.கருணாநிதி மாவட்ட ஊராட்சி மன்ற தலைவர் படப்பை ஆ.மனோகரன், தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் ஜி.காமராஜ், மண்டல குழு தலைவர்கள் டி.காமராஜ், எஸ்.இந்திரன் தலைமை செயற்குழு உறுப்பினர் ஆதிமாறன், பகுதி கழக செயலாளர் திருநீர்மலை த.ஜெயக்குமார், பெருங்களத்தூர் தெற்கு பகுதி செயலாளர் எஸ்.சேகர், உள்ளிட்ட மாவட்ட மாநகர நிர்வாகிகள் மாமன்ற உறுப்பினர்கள் வட்ட கழகத் தோழர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

அமைச்சர் பி.கே. சேகர்பாபு முன்னிலை! வி.சுதாகர் தலைமை!

எழும்பூர் தெற்கு பகுதி சார்பில் 28 இணையர்களுக்கு சீர்வரிசையுடன் திருமணங்கள்!

பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ. வேலு நடத்தி வைக்கிறார்!

சென்னை, ஜூன்.26

சென்னை கிழக்கு மாவட்டம் எழும்பூர் தெற்கு பகுதி சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் பிறந்தநாள் முன்னிட்டு செம்மொழி 11 ஆயிரங்காலப் பயிர் வளரட்டும்! ஆதவன் கலைஞரை புகழட்டும்! என்ற தலைப்பில் நாளை 27.06.2025 வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு பெரியார் திடல், வேப்பேரியில் மாவட்ட செயலாளர் - அமைச்சர் பி.கே. சேகர் பாபு முன்னிலையில் பகுதி செயலாளர் வி. சுதாகர் தலைமையில் நடைபெறுகிறது.

விழாவில் 28 இணையர்களுக்கு சீர்வரிசையுடன் கூடிய திருமணங்களை பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ. வேலு நடத்தி வைக்கிறார்.

இதில் மேயர் பிரியா ராஜன், தயாநிதிமாறன் எம்பி, சட்டமன்ற உறுப்பினர்கள். இ. பரந்தாமன்,ப. தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், அ.வெற்றி அழகன், மற்றும்

பா.ரங்கநாதன், சொ.வேலு, பி.எம் யாழினி, கோ ஏகப்பன், ஸ்ரீராமுலு எம்.சி, KSM.நாதன், ராஜேஸ்வரி ஸ்ரீதர், அ நிர்மலா தேவி பரிதி இளம் சுருதி ,பாத்திமா முசாபர், எழும்பூர் தெற்கு,வடக்கு பகுதி கழக நிர்வாகிகள். எஸ்.ரசூல்,டி.வி.வேலு, எம்.மலர்மாறன், கே.அன்னபூரணி, எஸ். ஜெகதீசன், எம்.தில்லைகுமார், பி.சி.சம்பத்குமார், ஊ.கே.கருணாகரன், கே. வள்ளி,சூளைசுப்பராயலு, எழும்பூர் தெற்கு, வடக்கு வட்ட கழக செயலாளர்கள் வி.விஜயகுமார்,

ஆர்.பாபு (எ) சந்திரசேகரன், எஸ்.டால்பின் ஹரி, இ.மொய்தீன், வான்மதிகதிரவன், தி.தயாளன், வி.அபாய், சு.மனோகர், ந.பாலு, ஆர்.எம்.ரங்கநாதன், சி.சேகர், மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு - அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ. முன்னிலை! கூ.பீ.ஜெயின் எம்.சி. தலைமை!

வில்லிவாக்கம் மேற்கில் மாணவ - மாணவியர்களுக்கு கல்வி உதவித் தொகை - கல்வி உபகரணங்கள்!

அமைச்சர் சி.வெ.கணேசன் - நடிகர் பாண்டியராஜன் வழங்குகின்றனர்!

சென்னை, ஜூன். 26 -

சென்னை கிழக்கு மாவட்டம், வில்லிவாக்கம் மேற்கு பகுதி தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞரின் செம்மொழி நாள் முன்னிட்டு செம்மொழி - 23, கல்விக்கு உதவுதல் முதல் கடமை! கலைஞரின் புகழுக்கு அது பெருமை! எனும் தலைப்பில் மாணவ - மாணவியர்களுக்கு கல்வி உதவித் தொகை - கல்வி உபகரணங்கள் வழங்கும் விழா இன்று (26.06.2025 - வியாழக்கிழமை) மாலை 4 மணியளவில், வில்லிவாக்கம், சிட்கோ நகரில் நடைபெறுகிறது.

வில்லிவாக்கம் மேற்கு பகுதிச் செயலாளர், 8 வது மண்டலக் குழுத் தலைவர் கூ.பீ.ஜெயின் தலைமை வகிக்கிறார்.

மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு, வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் அ. வெற்றிஅழகன், கிழக்கு பகுதிச் செயலாளர் வே.வாசு, சாவித்திரி வீரராகவன், சுதா தீனதயாளன் எம்.சி, டி.வி.செம்மொழி எம்.சி, வானவில் விஜய், லதா வாசு எம்.சி, ஆர்.வரதன், ஜி.ஜெ.பிரபு, எம்.சுரேஷ், வில்லிவாக்கம் மேற்கு பகுதிக் கழக நிர்வாகிகள் ஜெ.எஸ்.பிரபு, வி.து. இராமமூர்த்தி, பா.இளையா, ம.கலைச்செல்வி, ஐ.சி.எப்.மு.சுரேஷ் பாபு, வில்லிவாக்கம் மேற்கு பகுதி, வட்டக் கழகச் செயலாளர்கள் ஆர்.தினதயாளன், க.சுகுமாறன், மா.அகிலன், பா.ஜானி, சொ.முருகேசன், ப.லோகுபாபு, கே.எஸ்.பாபு ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

வில்லிவாக்கம் மேற்கு பகுதி, மாவட்டப் பிரதிநிதிகள் ஆர்.கோபாலகிருஷ்ணன், சிட்கோ ப.சுரேஷ் பாபு, ம.சுந்தர்எபி, கோ. மணிவேந்தன், மா.கபிலன், பா.தே.தீனதயாளன், க. மணிமாறன், எஸ்.கே.பி. தீபக்குமார், ஆ.சக்திவேல், பூ.சத்தியேந்திரன் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன், நடிகர் பாண்டியராஜன் ஆகியோர் மாணவ - மாணவியர்களுக்கு கல்வி உதவித் தொகை மற்றும் கல்வி உபகரணங்கள் வழங்குகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன், மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல், தலைமை செயற்குழு உறுப்பினர், தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனம் தலைவர் ப.ரங்கநாதன், வில்லிவாக்கம் தொகுதி தேர்தல் பார்வையாளர் ஓ.எ.நாகலிங்கம், கே.எஸ்.ரவிச்சந்திரன், பி. கே.மூர்த்தி எம்.சி, கே.சந்துரு, சி.மகேஷ்குமார், சங்கரி நாராயணன், எஸ்.மணிமுடி கே.எஸ்.எம்.நாதன், எம்.விஜயகுமார், என்.பி. எம்.ஷேக் அப்துல்லா, வே. உமாகாந்த், பரிதி இளம் சுருதி எம்.சி, வழக்கறிஞர் இந்திராஜித், காஞ்சி வெ. பாஸ்கர், கோ.ஏகப்பன், தேவஜவகர், ஜி.மகா தேவன், புனிதவதி எத்திராசன் எம்.சி, இசட்.ஆசாத் எம்.சி,

சொ.வேலு எம்.சி, சரிதா மகேஷ்குமார் எம்.சி, பா.ஸ்ரீராமுலு எம்.சி, டாக்டர் ஜி.சாந்தகுமாரி எம்.சி, ஐ.சி.எப்.வ.முரளிதரன், எ.நாகராசன் எம்.சி, டி.எஸ். பி.ராஜகோபால் எம்.சி, எம்.டி.ஆர்.நாகராஜ், செ. தமிழ்வேந்தன், எம்.சாமிகண்ணு, வி.சுதாகர், எஸ். முரளி, எஸ்.ராஜசேகர், எஸ்.பன்னீர்செல்வம், கோ.மணி, பி.ஜெ.துளசிங்கம், லயன் பி.உதயசங்கர், வி.ரமேஷ் (எ) நீலகண்டன் எம்.சி, எம்.இப்ராஹிம் கனி, அ.நிர்மலா தேவி, டாக்டர் ஏ.பி.பூர்ணிமா எம்.சி, இரா.கலைச்செல்வி மற்றும் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், பகுதி கழக, வட்டக் கழக நிர்வாகிகள், வட்டச் செயலாளர்கள், கழக முன்னோடிகள், பாக முகவர்கள் (பி.எல்.ஏ.2), பாக உறுப்பினர்கள் (பி.எல்.சி) நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

94 வது வட்டக் கழகச் செயலாளர் சிட்கோ சேகர் நன்றி கூறுகிறார்.

பல்லாவரம் சட்டமன்ற தொகுதி புனித தோமையர் மலை ஒன்றியம் பொழிச்சலூர் ஊராட்சியில் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 22 லட்சம் மதிப்பீட்டில் எல்.ஆர். ரசமாணிக்கம் தெருவிற்கு புதியதாக அமைக்கப்பட்ட தார் சாலையை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு துவக்கி வைத்து அங்கு நடைபெறும் தங்கள் ஏரி தனியார் தொண்டு நிறுவனம் மூலம் ஏரியை தூர்வாரி கரை பலப்படுத்தி அமைக்கும் பணிகளையும் மழைநீர் கால்வாய்கள் அமைக்கும் பணிகளையும் ஆய்வு மேற்கொண்டு பொதுமக்களிடம் குறைகளை கேட்டு அறிந்தார் அப்பொழுது ஊராட்சி மன்ற தலைவர் வனஜா தயாளன் துணைத் தலைவர் ஜோசப் ஒன்றிய ஒன்றிய கழக நிர்வாகிகள் செல்வராஜ், ராஜா, ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் கிளைக் கழக நிர்வாகிகள் ஆகியோர் உடன் இருந்தனர்

முத்தமிழறிஞர் கலைஞரின் மறுவுருவமாக தமிழ்நாட்டு மக்களுக்கு

பல்வேறு எண்ணற்ற திட்டங்களை நிறைவேற்றுகிறார் முதல்வர்!

அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் பேச்சு!

திருவள்ளூர், ஜூன் 26;

திருவள்ளூர் மத்திய மாவட்ட திருநின்றவூர் நகர இளைஞரணி சார்பில் நாடு போற்றும் நான்காம் ஆண்டு சாதனை விளக்கம் தெருமுனை பிரச்சாரம் கூட்டம் திருநின்றவூரில் நடைபெற்றது நகரச் செயலாளர் தி.வை.இரவி தலைமை தங்கினார் மாநில இளைஞரணி துணை செயலாளர் பிரபு கஜேந்திரன் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கே.சுரேஷ் குமார், நகர இளைஞரணி எஸ்.சுதர்சனம் ஆகியோர் வரவேற்புரை ஆற்றினார்கள் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ஆர்.செந்தாமரை, ஜி.சி.சி. கருணாநிதி, அக்னி ராஜேஷ், டி.பிரியா குமார், நகர் மன்ற தலைவர் உஷா ராணி ரவி , நகரக் கழக நிர்வாகிகள் ஜெ.அன்பழகன், சி.கமலக்கண்ணன், நாக ராஜ், ரவி, பாபு குணசேகரன், தங்கமணி, நகர இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ஆர்.ஸ்டீவ்வாக், ஜெ.பிரசன்னா, ராகேஷ் கண்ணா, துரையரசன், ஏ. உதய, முன்னிலை வகித்தார்கள்

இதில் மாவட்ட செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தூத்துக்குடி சரத் பாலா, டெக்சின் ரோமேரியோ, ஆகியோர் கலந்து கொண்டு திராவிட முன்னேற்ற நான்காம் ஆண்டு சாதனைகள் குறித்து பொதுமக்களிடம் விளக்கி சிறப்புரையாற்றினார்கள்

இதில் அமைச்சர் ஆவடி சாமு.நாசர் பேசுகையில் நாம் முதலமைச்சர் மகளிர் உரிமை தொகை தமிழ்நாட்டிற்கு கொடுத்தது போல, மகாராஷ்டிராவிலும் மோடி அரசு இந்த மகளிர் உரிமை அறிவிப்பை தேர்தல் பிரச்சாரத்தில் அறிவித்திருந்தது. அங்கு வெற்றி பெற்றதும் இந்த ஆயிரம் ரூபாய் கொடுக்கும் திட்டத்தை செயல்படுத்த வில்லை. மோடியை போல நன்றி கெட்டவர்கள் யாரும் இல்லை. நன்றி மறப்பது நன்றன்று என்ற குரலை மோடி அவர்கள் நன்றி மறப்பது நன்று அதுவும் இன்றே இப்பொழுதே இன்றைய தினமே மறப்பது மிகவும் நன்று என தனக்கு ஏற்றார் போல் மாற்றி உள்ளார். தமிழ்நாட்டுக்கு சேர வேண்டிய பேரிடர் தொகை ஜிஎஸ்டி தொகை என எதையும் கொடுக்க மறுக்கிறது இந்த மோடி அரசு என

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் மறு உருவமாக தமிழ்நாட்டில் மக்களுக்காக தமிழர்களுக்காக கடல் கடந்து வாழும் தமிழ் மக்களுக்கு கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு. க.ஸ்டாலின் அவர்கள் பல்வேறு எண்ணற்ற திட்டங்களை அறிவித்து அதனை சிறப்பாக செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்

ஆட்சியில் இருந்தாலும் இல்லாது விட்டாலும் பேரிடர் காலகட்டத்தில் தமிழ் நாட்டு மக்களுக்கு உறுதி தனியாக இருக்கும் ஒரே கட்சி திராவிட முன்னேற்றம் கழகம் தான்

இங்க வந்து இருக்கும் இளைஞர் அணி நிர்வாகிகள் வருகின்ற காலகட்டத்தில் உழைப்பு உன்னதருமாக வைத்து திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு உழைத்தால் திராவிட முன்னேற்றத்தில் உள்ள பல்வேறு பொறுப்புகள் உங்களைத் தேடி வரும் என்பதை டேய் தெருமுனை பிரச்சாரக் கூட்டத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்

இந்நிகழ்ச்சியில் தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், பொதுக்குழு உறுப்பினர்கள் ஜி.விமல்வர்ஷன், நிர்வாகிகள் மோகனகிருஷ்ணன், சலீம், த.குமரேசன், ஆர்.பிரவீன்குமார், பி.எல். ஆர்.யோகா, வ.ஹரி, கோடீஸ்வரன், ஏகாம்பரம், பால்ராஜ், வெங்கடேசன், மாதவன், மு.பா.மகேஷ், மேகநாதன், முரளி, பாஸ்கரன், செந்தில் வேல், ரவிச்சந்திரன், தி.தெ.பாபு, தெய்வசிகாமணி ராதா ரவிச்சந்திரன், ஹரிபாலன், வி. மகேஷ்குமார், மற்றும் கழக நிர்வாகிகள் இளைஞரணி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

முடிவில் நகர இளைஞரணி துணை அமைப்பாளர் பட்டாணி கார்த்திக் நன்றி கூறினார்.

சுகாதாரச் சான்றிதழ் வழங்கும் நடைமுறை!

எளிமை ஆளுமைத் திட்டத்தின் கீழ் - எளிமைப்படுத்தி வழங்குதல்!

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அறிவிப்பு!

சென்னை, ஜூன் 25-

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை - சுகாதார சான்றிதழ் வழங்கும் நடைமுறையினை எளிமை ஆளுமை (Simple Gov) திட்டத்தின் கீழ் எளிமைப்படுத்தி வழங்குதல் குறித்து வெளியிட்டுள்ள அறிவிப்பு வருமாறு:-

எளிமை ஆளுமை (SimpleGov) திட்டத்தின் கீழ் சுகாதார சான்றிதழ் (Sanitary Certificate) பெறுவதற்கான நடைமுறை தற்போது எளிமைபடுத்தப்பட்டுள்ளது.

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் மூலம் சுகாதார சான்றிதழ் வழங்கும் தற்போதைய நடைமுறை மாற்றப்பட்டு, சுகாதாரம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் அரசாணை (நிலை) எண்: 276 நாள் 23.09.2024-ல் குறிப்பிட்டுள்ள நடைமுறைகளை பின்பற்றி இ-சேவை இணையதளம் (https://www.tnesevai.tn.gov.in/) வாயிலாக சுய சான்றளிப்பின் அடிப்படையில் சுகாதார சான்றினை பெறலாம்.

மேற்காணும் சான்றில் தெரிவிக்கப்பட்டுள்ள விவரங்களின் உண்மைத்தன்மையினை ஆய்வு செய்ய பொது சுகாதார துறை அலுவலர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அச்செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெரியார் நூலக வாசகர் வட்டம் சார்பில்

கலைஞர் 102 - சிறப்பு சொற்பொழிவு!'

மாம்பலம் ஆ.சந்திரசேகர் சிறப்புரை!

சென்னை, ஜூன்.26-

பெரியார் நூலக வாசகர் வட்டம் சார்பில் 2553 ஆம் நிகழ்வாக கலைஞர் 102 - சிறப்பு சொற்பொழிவு இன்று (26.6.2025 - வியாழன்) மாலை 6.30 மணியளவில் அன்னை ஈ.வெ.ரா.மணியம்மை அரங்கம், பெரியார் திடலில் நடைபெறுகிறது.

நிகழ்ச்சிக்கு ஆ.வீர மர்த்தினி தலைமை வகிக்கிறார்.

இந்நிகழ்வில் சென்னை தெற்கு மாவட்ட அவைத் தலைவர் மாம்பலம் ஆ.சந்திரசேகர் சிறப்புரையாற்றுகிறார்.

தஞ்சை கூத்தரசன், தென்.மாறன், வழக்குரைஞர் பா.மணியம்மை, ஜெ. ஜனார்த்தனம் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இளவழகன் நன்றி கூறுகிறார்.

தாம்பரம் தொகுதிக்கு உட்பட்ட அகரம் தென் ஊராட்சியில் தாமரை சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியில் சமுதாய நடக்கூட சுற்றுச்சுவர் 25 லட்சம், காமராஜர் தெரு சிமெண்ட் சாலை 10.22 லட்சம், குறித்தும் அங்கன்வாடி மையம் 17.25 லட்சம் ஆகிய பணிகளை மாநகர கழகச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் ஊராட்சி மன்ற தலைவர் சி.கே.ஜெகதீஸ்வரன், துணைத் தலைவர் அரவிந்த் மனோகரன்,வார்டு உறுப்பினர்கள் பா. சரவணன், ஆ.ராமச்சந்திரன், மேசலா சேட்டு மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர், ஒன்றிய செயற்பொறியாளர், ஒன்றிய பணி மேற்பார்வையாளர், மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் ஊராட்சி செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.